# சமகால போக்கினைப் பேசும் சமூக ஊடகமாகத் தெருக்கூத்து

**"**கற்புக்கரசி கருணாம்பிகை திருமணமென்னும் வினாஜபாலன் பட்டாபிசேகம்" எனும் பனுவலை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

காராளசிங்கம் அற்புதன், *ஆய்வாளர், மட்டக்களப்பு, இலங்கை.*

***ஆய்வுச் சுருக்கம்***

இவ்வாய்வனது தமிழ் நாட்டின் பாரம்பரிய கலைவடிவமாக பேணப்பட்டு வருகின்ற தெருக்கூத்தானது தன்னகத்தே பேசுகின்ற சமூகப் போக்கினைப் ஆராய்வதாக அமைகிறது. மக்களிடம் இலகுவாக கருத்துக்களை கொண்டு செல்கின்ற இக்கலை வடிவமானது தற்கால சூழலுக்கு பெருத்தமான போக்கினையுடைய ஊடகமாக தெருக்கூத்து கலை திகழ்கின்றமை காணமுடிகின்றது.

இத்தகு பண்பினை தன்னகத்தே கொண்டுள்ள தெருக்கூத்தானது பெண்களின் கற்புஇ தார்மீக சிந்தனைகள்இ சுயமனித ஒழுக்கம்இ சமுக ஒழுக்கம்இ அரசியல்இ கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் போன்ற பல விடயங்களை பேசு பொருளாகக் கொண்டிருக்கின்றது. தெருக்கூத்தினையும் சிலப்பதிகாரத்தினையும் ஒப்பீடு செய்த சண்முகப்பிள்ளை.எம். என்பவர் சிலப்பதிகாரத்தினை தெருக்கூத்தின் முன்மாதிரி வடிவம் எனக் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். இக்கலை வடிவமானது பல்வேறுபட்ட சமகாலத்திற்குப் பொருத்தமான கருத்துக்களையும், சிந்தனைகளையும், சமூகப் பிரச்சினைகளையும் உட்பொருளாக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமகால போக்குகளை சிறப்பான முறையில் அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் இக்கலை வடிவமானது வெளிப்படுத்தி நிற்கின்றமை சிறப்பிற்குரியது. அந்த வகையில் இவ்வாய்வானது "கற்புக்கரசி கருணாம்பிகை திருமணமென்னும் வினாஜபாலன் பட்டாபிசேகம்" எனும் நாடகப் பனுவலின் மையக்கருவாக விளங்கும் கற்பு, அதன் முக்கியத்துவம், கற்பினை காப்பதற்காக பெண்கள் எதிர் கொள்ளும் சவால்களையும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைவதுடன் என்பதும் எவ்வாறான சமகால சிந்தனைகளை பேசு பொருளாக கொண்டமைகின்றது என்பதனையும் ஆய்வு செய்வதோடு இன்றைய சமூகப் போக்கினை பேசும் கருவியாக எவ்வாறு அமைந்து காணப்படுகிறது என்பதனை ஆராய்வது ஆய்வின் நோக்கமாகும்.

சமகால போக்குகளை வெளிப்படையாகவும், குறியீடாகவும் கலைவடிவம் சிறப்பாக பேசுகின்றது என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் அதில் உட்பொதிந்துள்ள சமூக மாற்றத்திற்கான கருத்துக்களையும் கண்டறிவதாக இவ்வாய்வு அமைகின்றது. "கற்புக்கரசி கருணாம்பிகை திருமணமென்னும் வினாஜபாலன் பட்டாபிசேகம்" எனும் நாடகப் பனுவலை ஆய்வு செய்வதனூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்***

*பனுவல், பாரம்பரியம், சிந்தனைக் கருத்துக்கள், சமகாலப் போக்கு, நாடகம். கருவி*

**அறிமுகம்.**

கூத்தானது ஆடல், பாடல், இதிகாச, புராண கதைகளைக் உட்பொருளாகக் கொண்ட சமூக்க மாற்றத்திற்காக ஒரு அரங்காக காணப்படுகின்றது. சமூகத்திற்கான கருத்துக்களை வெளிப்படுத்துவதுடன் சமூக போக்குகளை பேசும் ஊடகமாக கூத்து காணப்படுகின்றது. அது மாத்திரமின்றி சமூகத்தினை ஒன்றிணைத்தல் சமூகத்திற்கிடையிலான நல்லுறவைப் பேணுதல் போன்றவற்றினூடாக சமூகத்தினை நடத்திச்செல்கின்ற ஓர் தளமாக காணப்படுகின்றது. புரிதல்இ தெளிதல்இ விளங்கிக்கொள்ளுதல் போன்ற முக்கிய அம்சங்களை சமூகத்திற்கூட்டுவதாக இக்கூத்துகலை வடிவம் காணப்படுகின்றது. அந்த வகையில் தமிழ் நாட்டில் பிரகனப்படுத்துகின்ற முக்கிய பாரம்பரிய கலையான

தெருக்கூத்து தன்னகத்தே பாரிய சமூக விடயங்கள் சமூக போக்குகளை சுட்டிக்காட்டும் தன்மையில் அதன் உட்பொருள் அமைந்திருப்பது சிறப்புக்குரியது. "**தெருக்கூத்து என்பது ஒரு வகையான பொழுதுபோக்கு, ஒரு சடங்கு மற்றும் சமூக நிலையைக் கூறும் ஊடகம்**" (Varathpande, Monohar Laxman, 1990, P39-44).

ஆடல் பாடல் இசைகளினூடாக சமூக கருத்துக்களை பார்வையாளர்கள் இலகுவாக விளங்கிக்கொள்ளும் விதத்தில் அமையப்பெற்றுள்ள இக்கலைவடிவம் தற்கால சமூகப்போக்கினை பேசும் ஒரு முக்கிய பொருளாக காணப்படும் தன்மையினை ஆராய்வதன் மூலம் இக் கலையினுடைய சிறப்புக்களை மேலும் விளங்கிக்கொள்ள முடியும். "**புத்திசாலித்தனமான பாடல் இசை நடனம் மற்றும் நாடகம் ஆகியவற்றின் கலவையாக தெருக்கூத்து நாடகங்கள் உள்ளன**"(Green, Jesse, 2017).

"கற்புக்கரசி கருணாம்பிகை திருமணமும் வினாஜபாலன் பட்டாபிசேகமும்" எனும் தெருக்கூத்து நாடக இலக்கியத்தை நோக்குகின்றபோது சமூகப் பாத்திரங்கள் உருவாக்கப்பட்டு அதனூடாக தனிமனித, சமூகப் பண்புகள், குணங்கள், அடையாளங்கள், வாழ்க்கை முறைகள் போன்ற சமூகத்திற்குத் தேவையான விடயங்களை கூறுகின்ற ஒரு பனுவலாகக் காணப்படுகின்றது.

**கதைச் சுருக்கம்.**

கனமாம்புரி பட்டிணத்தை கர்பூசன மகாராஜன் தனது மனைவி மதியொளிவதனி, மகள் கருணாம்பிகையோடு ஆட்சி செய்துவருகிறான். அப்போது தனது ஆட்சிக்குப் பின் முடிசூட ஆண் வாரிசு இல்லாத காரணத்தினால் மனமுடைந்து வருந்துகின்றான். இதனைக் கண்ட அரசி ஆறுதல் கூறுகிறாள். அதாவது மகளுக்குத் திருமணம் செய்து வைத்து அவளின் கணவனுக்கு முடிசூட்டுவோம் எனக் கூறுகிறாள். அதனை ஏற்ற கர்பூசன மகாராஜன் தன்னுடைய தங்கையின் மகன் சுயம்பிரகாசனுக்கு மணமுடிக்க விரும்புகிறான். சுயப்பிரகாசன் சோதிபயகிரி பட்டத்தை ஆட்சி செய்கின்றான். ஆனால் இதனை ஏற்காத மதியொளிவதனியோ தனது தமையனின் மகன் நவனீத மகாராஜனுக்கு மணமுடிக்க விரும்புகிறாள். இவ்வாறு இருவருக்குமிடையில் உரையாடல் இடம்பெற்ற பின்னர் மகள் கருணாம்பிகையின் விருப்பத்தை கேட்கிறார்கள். தந்தையின் விருப்பப்படி திருமணம் செய்தால் தாய் கலக்கமடைவாள். தாயின் விருப்பத்திற்கேற்ப திருமணம் செய்தால் தந்தை வருத்தப்படுவார் என்ற காரணத்தினால் அவள் ஒரு முடிவு எடுக்கின்றாள். அதாவது தேசத்து அரசர்களை அழைத்து அவள் கையால் மாலை சுற்றி வீசும் போது யார் கழுத்தில் மாலை விழுகிறதோ அவரை திருமணம் செய்வதாக கூறினாள்.

தேசத்து மன்னர்களுக்கு திருமண செய்தி அனுப்பப்படுகின்றது. அனைவரும் வருகின்றார்கள். அதேபோன்று தனது முறை மைத்துனர்கள் இருவருமாகிய நவனீத மகராசனும் சுயம்பிரகாரனும் வருகிறார்கள். இதே சமயத்தில் விசாலபுரி பட்டினத்தை ஆண்ட வினாஜபாலன் குஸ்ட நோயினால் பாதிக்கப்பட்டு நாடு நகர் இழந்து தன்னுடைய அழகினையும் இழந்து கொடிய நோயுடன் பிச்சை எடுத்து வருகின்றான். அவ்வாறு வரும் வழியில் சுயம்பர நிகழ்வு இடம்பெறும் இடத்தினை அடைந்து உணவு கேட்கிறான். அவர்கள் திருமண நிகழ்வு முடிய உணவு வழங்குவர் அதுவரை காத்திருக்குமாறு கூறினர்.

இவ்வாறு இருக்க அரசர்கள் அமர்ந்திருக்கும் இடம் நோக்கி கருணாம்பிகை வருகிறாள். மாலையை சுழற்றி வீசுகிறாள். அந்த மாலை வினாஜபாலன் கழுத்தில் விழுகின்றது. அனைவரும் திகைக்கிறார்கள். அந்நிகழ்வினால் கருணாம்பிகையின் தந்தை சஞ்சலமடைகின்றார். பிச்சைக்காரன் கழுத்திலிருந்த மாலையை எடுத்து தனக்கு பிடித்த ஒருவருக்கு மணமுடித்து வைப்பதாகக் கூறுகிறார். அவள் மறுக்கவே முறை மைத்துணர்கள் இருவரும் அவர்கள் மீது கோபம் கொண்டு உறவை முறித்துச் செல்கின்றனர் குஸ்டரோகிக்கு மாலையிட்டதால் தாய்தந்தயரின் வெறுப்புக்குள்ளாகி அரண்மனையை விட்டு வெளியேறுகிறாள். வினாஜபாலன் தனது நோய் மற்றும் வாழ்கை நிலையைச் சிந்தித்து தன்னை விட்டு விலகிப்போகுமாறு கூறுகிறான். அதனை ஏற்க மறுத்த கருணாம்பிகை அவனுடன் செல்கின்றாள். அப்போது அனந்தபுரி அரசன் அபரஞ்சனன் அரண்மனையில் திருட்டு இடம்பெறுகிறது. அப்பழியானது அவ்வேளை அவ்வூருக்குள் நுழைந்த கருணாம்பிகை வினாஜபாலன் தம்பதிகளின் மீது சேருகிறது. அபரஞ்சன மன்னன் இவர்களது தலைகளைத் துண்டிக்குமாறு கட்டளையிடுகிறான். அவ்வாறு செய்யும் போது வாள் இரண்டாக உடைகிறது. அவ்வேளை தன்னுடைய தவறை உணர்ந்து தம்பதியரிடம் மன்னிப்பு கோருகிறான்.

பின்னர் இருவரும் புனிதவனம் எனும் கானகத்தை நோக்கிச் செல்கின்றனர். அங்கு வினாஜபாலனுக்கு தாகம் ஏற்படுகிறது. கருணாம்பிகை நீர் எடுக்கச் செல்கிறாள். வழி தெரியாமல் தடுமாறுகிறாள். இச்சந்தர்ப்பத்தில் சில அரக்கர்களிடம் சிக்கிக் கொள்கிறாள். அவர்கள் கருணாம்பிகையிடம் வன்முறையில் ஈடுபட முயற்ச்சிக்கின்றனர்.

சூரிய தேவரின் அருளால் அரக்கர்களிடம் இருந்து தப்பிக்கிறாள். பின்னர் வனத்திற்கு சென்று பார்க்கும்வேளை வினாஜபாலன் நிலை கவலைக்கிடமாகி உயிருக்கு போராடிக்டிக்கொண்டிருக்கின்றான். எமதருமன் உயிரைப் பறிக்க வருகின்றான். அவளது சேலைத் தலப்பினால் அவனை மறைத்து உயிரைக் காக்கின்றாள். எமதருமனின் முயற்சிகள் பயனளிக்க முடியாமற்போக சிவனது உதவியை நாடுகிறார்.

சிவனாலும் உயிரைப் பறிக்க முடியாமற்போக, கருணாம்பிகையின் ஒழுக்கம், மகத்துவம் கண்டு நீண்ட ஆயுளையும் வினாஜபாலனுக்கு நோயிலிருந்து விமோசனமும் அளிக்கின்றார். இவ்வாறு கற்புக்கரசி கருணாம்பிகை திருமணம் வினாஜபாலன் பட்டாபிசேகம் எனும் நாடகப் பனுவல் நிறைவுறுகிறது.

**சமூக சிந்தனைகள் :-**

"**தற்போது சினிமாஇ தொலைக்காட்சி முதலான நவீன ஊடகங்களின் பக்கம் மக்களின் கவனம் திரும்பி விட்டதால் தெருக்கூத்து மவுசு குறைந்து விட்டது**"(Asianet Tmil, 2019) இன்றைய தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் சினிமாவின் தாக்கமும் பல்வேறு கோணங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற நிலையில் அதில் மூழ்கடிக்கப்பட்டு எமது பாரம்பரியங்களை இழந்து சமூகப் பொறுப்பற்றதகவே சமூகம் மாறிக்கொண்டிருக்கின்றது. கலை எனப்படுவது கிராமங்களிலேயே பொதிந்து கிடகின்றது. எவ்வளவுதான் படித்தாலும் உயர்நிலைக்குச் சென்றாலும் நகர்ப்புரங்களில் வாழ்ந்தாலும் அவர்களைப் பாதுகாக்கின்ற இடமாக கிராமங்கள் காணப்படுகின்றன. "**பழமையின் சின்னமாகவும் பண்பாட்டின் எச்சமாகவும் விளங்கும் கூத்துக் கலையானது நாட்டுப்புற மக்களின் எண்ணங்கள்இசெயல்இபண்பாடு வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டுகிறது**"(Abimathi Jeevanandam,2020, roar. media).

உலகமயமாக்கல் சிந்தனை மனிதனை தனியன்களாக்கி சிந்திக்க விடாமல் ஒன்றுசேர விடாமல் ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதனை தற்கால சூழலில் காணமுடிகின்றது. இதனால் மனிதர்கள் பல்வேறு நிலைகளில் தங்களை அறியாமலே பாதிக்கப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் உலகமயமாக்கல் சூழலில் இருந்து மனிதனை விடுவிக்கச் சிறந்த ஆயுதம் கூத்து எனலாம். எனவே சமகாலச் சூழலில் கூத்தின் முக்கியத்துவம் உணரப்படவேண்டியுள்ளது. "ஒழுக்கம், கல்வி, வீரம்", ஈகை, சான்றாண்மை முதலிய நற்பண்புகள் வழுவாது அவற்றோடு ஒட்டி ஒழுகும் சான்றோர்களாலேயே இவ்வுலகம் நிலைபெற்று வாழ்கிறது இத்தகைய நற்பண்புகள் பலவற்றையும் பெற்றுத்திகழும் முன்னோர்கள் தாம் படைத்த இலக்கியஇ இலக்கணவியலில் இப்பண்புகளைப் பதியச் செய்து எதிர்கால மக்கள் பண்புடன் வாழ வழி வகுத்துள்ளனர்"( பெரியசாமி.பி.முனைவர்,2020,p72). இதில் கூறப்படுகின்ற விடயங்கள் சமுகத்தினுடைய போக்கினை சிறப்பான முறையில் பேசு பொருளாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. "**சிலப்பதிகாரம் மற்றும் தெருக்கூத்து இரண்டும் பெண்களின் கற்பு மற்றும் தார்மீக மையமாகக் கொண்டுள்ளன**"(Varathpande, Monohar Laxman, 1990, P39-44) அந்த வகையில் தெருக்கூத்ததும் விதிவிலக்கன்று. ஆகையால் இந்நாடகப்பிரதி உள்ளடக்கியிருக்கின்ற சமகால சமூகப் போக்கினை ஆராய்வது முக்கியமானதாகும். "**பக்தசீராளன், பக்தப் பிரகலாதன், லோகிதாசன் போன்ற பாத்திரங்கள் மேடையில் தோன்றி நடிப்பதும்இ பேசுவதும் பாடுவதும் குழந்தைகள் உள்ளங்களை கவர்கின்றது. திரௌபதிஇ ரதிஇ சந்திரமதிஇ சீதைப் போன்றப் பாத்திரங்களின் வாழ்க்கையினையும்இ சோகங்களையும் கூத்தில் காணமுடிகின்றன**" (கோ.சுப்பிரமணியம்இ 2021 தமிழ்ச்சுரங்கம்.காம்)

அந்த வகையில் சமூகப் பேசு பொருளாக சமகாலத்தில் இருக்கின்ற அம்சங்களில் ஒன்றான குழந்தைப்பேறு பற்றி இந்நாடகத்தில் காண முடிகின்றது. கர்பூசன மகராசன் கூறுகையில் **"மைந்தன் இல்லாக் குறையால் என்மனது வாடுதே"** எனும் பாடலடியானது குழந்தைப்பேறு இல்லாமல் ஒரு சாரார் துன்பப்படுகின்றார்கள் என்பதைக் கூறுவதோடு குழந்தைச் செல்வம் மிகவும் முக்கியமானது என்பதைக் கூறுகின்றது. இன்றைய நிலையில் குழந்தைகளைக் கொலலுதல், புதைத்தல், கருக்கலைப்பு, குழந்தைகள் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகங்கள் என்பன இடம்பெறுகின்ற நிலையில் குழந்தைகளின் முக்கியத்துவத்தினை சமூகத்திற்கு வழங்குவதாகவே அமைகின்றது.

அதே போன்று சமகாலச் சூழலில் மாமியார், மருமகள் , மாமனார், மருமகன் பிரச்சினை எனக் குடும்பத்தில் பல பிரச்சினைகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இந் நூலில் மதியொளிவதனியினுடைய கூற்றானது

உற்றுநோக்கத்தக்கது. **“மகளுக்குத் திருமணம் செய்து வைத்து மருமகனுக்கு முடிசூட்டுவோம்…”** அதாவது ஒரு வீட்டிற்கு மணமுடித்து வரும் ஆணோ, பெண்ணோ, அவர்களை தங்களுடைய பிள்ளைகளைப்போல் நடத்த வேண்டும் என்கின்ற அறிவுரையினை மேற்குறித்த கூற்று விளக்கி நிற்கின்றது எனலாம்.

ஒரு திருமணமானாலும் ஏனைய விடயங்களானாலும் நடைபெறுகின்ற போது தாய் தந்தையர் முடிவெடுத்தாலும் தங்களுடைய மகன் அல்லது மகளிடமோ அவர்களது விருப்பத்தினைக் கேட்டறிய வேண்டும். அவர்களது விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையை கூறுவதாக அமைகிறது. இன்றைய நிலையில் பல திருமணங்கள் அல்லது ஏனைய விடயங்கள் தோல்வியுறுவதற்கு காரணம் தாய்தந்தையரின் முடிவிற்கேற்ப நடைபெறுதலேயாகும். இதனால் குடும்பங்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றரமயினையும் காண முடிகின்றது. இங்கு கர்பூசன மகராசன் தன் மகளுடைய விருப்பத்தினை கேட்டறிவது சிறப்புக்குரியது. இதனை

**“வீணாய் ஏன் பேசிறாய் மல்லு**

**மகள் விருப்பத்தினை கேட்போமே நில்லு”**

எனும் பாடலடியினூடாக அறியலாம்.

மேலும் இப்பனுவலில் பெரியோரை மதித்தல், கணம்பண்னுதல், ஆசிபெறல், பிறரை மதித்தல் போன்ற தனிமனித நன்நடத்தைகளையும் நூலாசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஒரு மனிதனுடைய நடத்தைகளே அவனுடைய வாழ்க்கையை மேலோங்கச் செய்யும். பெரியவர்களின் ஆசியினைப் பெற்றுக்கொள்வதற்கும் இவை வழிவகுக்கின்றன. இதனை

**“மாமா வந்தனம் செய்தேனே உன்**

**மலரடிதனிலே கரமதைக் குவித்தே”**

என்ற நவனீத மகராசனுடைய கூற்றினூடாகவும் “**நவனீதா வாழ்ந்திருப்பாயே இந்நாட்டில் சுகமுடன்”** எனும் கர்பூ'ன மகராசனுடைய கூற்றினூடாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

நாம் செய்கின்ற வினைளுக்கும், தீங்குகளுக்குமேற்ப தண்டனை கிடைக்கும் என்ற கருத்தினையும் நூலாசிரியர் முன்வைத்துள்ளார். சமகாலத்தில் மனிதர்களால் மனிதர்களுக்கு ஏற்படும் தீங்குளையும் சுட்டிகாட்டுவதாக வினாஜபாலன் எனும் அரசனுடைய துயர வாழ்க்கையின் மூலம் அறியலாம். இங்கு அரசனாக இருந்தாலும் சாதாரண மனிதாக இருந்தாலும் நீதி ஒன்றுதான் என்கின்ற போக்கினை சமூக பேசு பொருளாக சுட்டிக்காட்ட முடியும்.

**“என் வினைப் பயன் விதியல் தனிப்பட நின்றேன்**

**முன்னம் செய்த வினையால் முடவனாய் ஏறும் துன்ப……”**

என்ற வரியினூடாக அறியலாம்.

ஒருவருக்கு உதவி செய்தால் அந்த உதவியின் பலன் என்றோ ஒருநாள் கிடைத்தே தீரும் என்ற சமூகக் கருத்தினையும், பசித்து வருவோருக்கு அன்னமிட்டால் பல நன்மைகள் வந்து சேரும் என்ற சிந்தனைக் கருத்தினையும் இந்நாடகப் பிரதி உள்ளடக்கியுள்ளது. வினாஜபாலனுடைய பாடலடியினை நோக்குகின்ற போது **“சோறிட்ட பேருக்கல்லாம் சொர்க்கமுண்டு வையகத்தில்……”** என்ற பாடல் வரியானது விருந்தோம்பலின் முக்கியத்துவத்தினை எடுத்தியம்புகின்றது. அதுமட்டுமின்றி பிச்சை எடுப்பவர்கள் அவர்களாகப் பிச்சை டுெப்பதில்லை. அவர்கள் பிச்சை எடுக்கும் சூழலுக்குள் சமூகமானது தள்ளிவிடுகிறது. என்கின்ற சமூகப் பேசுபொருளைக் கூறுவதாக இநாடகப் பிரதி அமைந்துள்ளது. ஓவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கைக்குப் பின்னும் சமூகத்தினுடைய பொறுப்பு மிக முக்கியமானதாக கூறப்பட்டுள்ளது.

இன்றைய உலகில் பட்டினியால் மக்கள் வாடுவது, துன்பப்படுவது, இறப்பது போன்ற பல நிகழ்வுகள் சமகால உலகில் அதிகளவில் இடம்பெறுகின்றது. பசி என்பது மிகவும் ொடுமையானது என்கின்ற கருத்தினை **“ஐயகோ! பசி**

**வதை சொல்லமுடியத கதை....”** என்ற வினாஜபாலனது பாடலினூடாக அறியமுடிகிறது. அதுமட்டுமின்றி தகுதியானவர்களுக்கு தகுதியானவைகள் இன்றைய காலகட்டத்தில் கிடைப்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என்ற பேசு பொருளை நாடகப் பிரதி உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏழைகளுக்கோ, நலிவடைந்தவர்களுக்கோ கிடைக்க வேண்டிய உதவிகளை ஒருசாரார் தட்டிப் பறிக்கின்றமையை சிறப்பாக ஆசிரியர் வெளிக்காட்டியுள்ளார். மேலும் ஏழைகளிடம் சுரண்டிப் பிழைக்கின்ற செல்வந்தர்கள், நிறுவனங்கள், அரசஊழியர்கள் போன்றோரது செயற்பாடுகளை குறியீடாக சாடுவதனையும் அவதானிக்க முடிகின்றது. மேலும் கர்பூசன மகராசனுடைய பின்வரும் பாடலானது

**“குஸ்ட ரோகிக்கு மாலை போட்டதை எடுத்துவந்து**

**இஸ்டம்போல் வரனைப் பார்த்து இன்பமாய் மணமுடிப்பேன்.....”**

மேல்மட்டத்தில் இருக்கின்ற அதிகார வர்க்கத்தினரின் வலிய போக்கினையும் மறு புறம் தெளிவுபடுத்துகிறது. கட்டளையிடும் பதவியில் இருப்பவர்கள் தங்களுக்கு சாதகமான முறையில் விதி முறைகளை மாற்றியமைக்கும் திறன் படைத்தவர்களாக் காணப்படுதும் இதனால் நலிவடைட்தோர்கள் பாதிப்புக்குள்ளாவதனையும் சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர்.

இப் பனுவலில் குடும்ப ஒழுக்கம் சார்ந்த கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது. ஒருவர் மணமுடித்தால் துணையாக வருபவரோடு பண்பாக, அன்பாக இன்ப துன்பங்களிலும் பங்கு கொண்டு வாழ வேண்டும் என்பதனை, கருணாம்பிகை மாலை போட்டவனையே மணமுடிக்க உறுதி பூணுவதனூடாக அறியலாம். அதுமட்டுமின்றி ஒரு ஆண், பெண்ணின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவளை சீரும் சிறப்புமாக வாழ வழிசெய்வதுடன் அவளது நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக இருக்க வேண்டும் என்பதனையும் சிறப்பான முறையில் விளக்கிச் செல்கிறார் நாடகாசிரியர். இதனை, **“நட்புகள் பெருக நாட்டின் நாசியே மனுவிற்று கற்புதனைக் காப்பேன்....”** எனும் வினாஜபாலன் கூற்றினூடாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

பெண்கள் சமூகத்திற்கு மிகவும் முக்கியமானவர்கள். சமூக ஓட்டத்திற்கு பாரிய பங்காளர்ளாக இருக்கின்றனர் என்பதனை இந்நாடகப் பிரதி சுட்டிக்காட்டுகின்றது. பெண்ணினாலேயே ஆண்கள் முன்னேறவும், எல்லாவற்றையும் வெற்றி கொள்ளவும் முடியும் என்கிறார் ஆசிரியர். சான்றாக **“சிவபெருமான் கருணாம்பிகையின் ஆயுளில் பாதியை வினாஜபாலனுக்கு வழங்குவதும், கருணாம்பிகை அவனது உயிரை எமதருமனிடம் இருந்து காப்பதுவும், அவளது கற்பின் திறத்தினால் சிவனருள் கிடைகக்ப்பெற்று குஸ்டரோகத்திலிருந்து விமோட்சனம் பெறுவதனையும்**” குறிப்பிடலாம். அதுமாத்திரமின்றி மனைவி கணவனையும், கணவன் மனைவியையும் வழிப்படுத்தல் மிகவும் முக்கியமான ஒன்றாக இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. யாராவது ஒருவர் முறைதவறி செல்கின்ற போது அவர்களைத் திருத்தி நல்வழிக்கு கொண்டு வருகின்ற பொறுப்பு இருவருக்கும் உண்டு.. இதற்கு ஆதாரமாக வினாஜபாலன் வழியில் கிடக்கும் காசு மாலையை எடுக்கும்போது கருணாம்பிகை தடுப்பதனையும் குறிப்பிடலாம்.

ஒரு பெண்ணாவள் அன்புக்குக் கட்டுப்பட்டவள். அதே போன்று ஒரு முடிவினை தீர்க்கமாக எடுத்துவிட்டால் அதிலிருந்து பிசகாதவளாகவும், எடுத்த முடிவினை திறம்படச் செய்து முடிக்கும் தைரியமும், வல்லமையும் பெற்றவள் என்பதனை நாடு நகர் இழந்து, தனது பெற்றோர்களையும் விடுத்து வினாஜபாலனோடு கருணாம்பிகை செல்கின்ற தன்மையினைக் கூறலாம். மேலும் ஒரு குடும்பம் நிலைத்திருப்பதற்கு கணவன் மனைவிக்கிடையே அன்னியோன்யமும், புரிந்துணர்வும் அவசியமான ஒன்றாக் இருக்கின்றது. தற்காலத்தில் பெரும்பாலான இளவயதுத் தம்பதிகள் புரிந்துணர்வின்மையால் நீதிமன்றங்கள் வரை செல்வதனையும், தகாத உறவுமுறைகளை மேற்கொண்டு தங்கள் வாழ்வை சீரழிக்கின்றமையினையும் காணமுடிகின்றது. அந்த வகையில் கணவன் மனைவிக்கிடையிலான பரஸ்பர தொடர்பினையும் அன்பினையும்கூட ஆசிரியர் எடுத்துரைக்கத் தவறவில்லை எனலாம். இதனை

**“வாருமே அடி வஞ்சியே இருவரும் கொஞ்சி விளையாடலாம்**

**வருவாய் களவிசெய்ய நேரமாய் இருவரும்.....”**

எனும் அபரஞ்சன மன்னன் தனது மனையாளிடம் பேசும் காதல் மொழிகளினூடாக அறியலாம்.

சமூகத்தில் ஆணாதிக்கம் பெற்றிருந்தாலும் குடும்பம் என்ற ரீதியில் பெரும்பலான இடங்களில் குடும்ப பொறுப்பினைச் சுமப்பவர்களாக பெண்களே திகழ்கின்றனர் என்பதனை இப்பனுவல் சிறப்பாக எடுத்துரைக்கின்றது. இதற்கு குறியீடாக கருணாம்பிகை தனது கணவனை தோளில் சுமந்து செல்வதனைக் கூறலாம். இதனை **"துவண்டு உடல் வாட வேண்டாம். தோளின்மேல் உனை எடுத்து….:"** எனும் கருணாம்பிகையின் கூற்றினூடாக அறியலாம்.

தக்கணப் பிழைத்தல் எனும் கோட்பாட்டினை இப்பிரதியினூடாக காணமுடிகின்றது. அதாது சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளுதல் நன்மை பயக்கும் என்ற சிந்தனையை இங்கு நாம் காணமுடிகிறது. கருணாம்பிகை அரசகுலப் பெண்ணாக வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்த பெண். பிச்சைக்காரனாகிய வினாஜபாலனை மணந்து கானகம் செல்கிறாள். அங்கு நிலிய சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்கின்றமையை குறிப்பிடலாம்.

விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்ட கூர்ப்புக் கொள்கை மறைமுகமாக இங்கு எடுத்துக்கட்டப்பட்டுள்ளது. அதாவது நெருங்கிய உறவுகளுக்குள் தொடர்ச்சியான திருமண உறவுகளை மேற்கொள்வதை தவிர்தல் வேண்டும். இவ்வழக்கம் ஆரம்பகாலம் முதற்கொண்டே கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வேதகாலத்தில் பெண்களுக்கு விரும்பியவரை மணமுடிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டடிருந்த போதும் தந்தைவழி பிறந்தோரை மணமுடிக்கத் தடை காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் ஒரு குழந்தையின் நிறமூர்த்தங்கள் பெரும்பான்மையக தந்தையினுடையதாகவே காணப்படுவதாகும். ஆதலினால் நெருங்கிய உறவுகளைத் திருமணம் செய்கின்ற போது குழந்தைகள் குறைபாட்டுடன் பிறக்கின்றன. இவற்றைத் தடுக்கவே இம்வழமை கையாளப்பட்டிருந்தது. இதனை நூலாசிரியர் மறைமுகமாக சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்குச் சான்றாக தாய்தந்தையரின் பொருட்டு உறவினர்களை திருமணம் செய்ய விரும்பாமையை கூறலாம்.

ஏந்தவொரு விடயமாக இருந்தாலும் அதனைத் தீர விசரித்து உண்மையைக் கண்டறிதல் வேண்டும் எனும் கருத்தை நாடகப் பிரதியின் வாயிலாகக் கற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக அபரஞ்சன மன்னன் தீர விசாரிக்காமல் கருணாம்பிகை வினாஜபாலன் ஆகியோரின் சிரசினைத் துண்டிக்க முயற்சிப்பதனைக் கூறலாம். சந்தேகம் என்பது பொல்லாத ஒரு கொடிய நோய். என்பதற்கு உருவகமாக அவரஞ்ச மன்னனுடைய மாளிகை தீபற்றுதல், வாள் உடைதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதனை,

**"ஐயகோ! வாளும் ஒடிந்ததே எந்தன்**

**அழகு மாளிகையும் பற்றி எரியுதே…."**

என்ற பாடலினைக் கூறலாம்.

வினை விதைத்தவன் வினையறுப்பான் என்ற பழமொழியினையும் ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. பாவங்கள், தீங்குகள் செய்தால் அதற்குரிய தண்டனை பெருமடங்காகக் கிடைக்கும் என்பதனை எமலோகத்தில் இடம் பெறும் தண்டனைகளினூடாக எடுத்துரைக்கின்றார். **" மனைவியை வஞ்சித்த கணவனுக்கும், கணவனை வஞ்சித்த மனைவிக்கும் கசையடி கொடுத்து நெருப்புக் கம்பத்தில் கட்டுதல், வட்டி வாங்கியவனின் கரத்தினை வெட்டுதல், கருவைக் கலைத்தவர்களை செக்கில் கட்டிப் பிழிதல்"** போன்றவற்றைக் கூறலாம்.

இறுதியாக உண்மை, நேர்மை ஒருவரிடம் இருந்தால் அவருக்கு எவ்வளவுதான் துன்பங்கள் வந்தாலும் அவற்றினைக் கடந்து இறுதியில் அவர்களுக்கே வெற்றி கிட்டும் என்பதனையும் ஆசிரியர் எடுத்தியம்பத் தவறவில்லை. இதனை கருணாம்பிகையின் பொருட்டு வினாஜபாலனது குஸ்டரோகம் நீங்குதல், கருணாம்பிகையின் ஆயுளில் பாதியை அவன் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றைக் குறிப்பிலாம். இவ்வாறு கற்புக்கரசி கருணாம்பிகை திருமணம் வினாஜபாலன் பட்டாபிசேகம் பனுவலானது சமூகப் போக்கினை பேசு பொருளாகக் கொண்டு காணப்படுவது பிரதிக்கு தனிச் சிறப்பபைத் தருகின்றது எனலாம்.

**நிறைவுரை**

எந்தவொரு இலக்கியமும் தான் எழுந்த காலச் சூழலினைப் பிரதிபலித்துக் காட்டும் சமூகக் கண்ணாடியாகவே அமைகின்றன. இதற்கு இப் பனுவலும் விதிவிலக்கல்ல. "தமிழர்கள் பெரும்பாலன அறிவியல் கருத்துக்கள் நேரடியாகக் குறிப்பிடாமல் உவமைகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. நம்தமிழ்புலவர்களை நாம் அறிஞர்களாக

பார்க்காமல் இலக்கியவதிகளாகப்பார்பது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்"ரீளரியசயளெஇ 2019இ ிீ19) இதனடிப்படையில் பார்க்கின்ற போது இப்பனுவலின் சமூகப் பேசு பொருளானது கடந்த காலச் சமூகத்திற்கு மட்டுமின்றி நிகழ் காலமாகிய தற்காசச் சமூகத்தினையும் எதிர் காலச் சமூகத்தினையும் கருத்தில் கொண்டு சமூக சிந்தனைகளை எடுத்துக் கூறும் ஆசிரியரின் முற்போக்குச் சிந்தனையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும் இந்நாடக இலக்கியமனது கண்முன் காணக்கூடிய இன்மை வாழ்க்கையை மட்டுமின்றி கண்களுக்குப் புலப்படாத மறுமை வாழ்க்கையினையும் எடுத்துக்காட்டுவதனூடக இம்மை வாழ்வை எவ்வாறு வாழவேண்டும் என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளமையினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. அதுமட்டுமின்றி இன்றைய சமூகத்தில் நாகரீக மோகத்தின் காரணமாக முக்கியத்துவம் இழந்துகொண்டிருக்கின்ற கற்பு, பெரியோரை மதித்தல், பிரறை மதித்தல், பிறர் பொருள் விரும்பாமை, நீதி, கீழ்படிதல், போன்ற தனிமனித ஒழுக்கத்தினின் முக்கியத்துவத்தினையும் அறிய முடிகின்றது.

மேல் நிலையில் இருப்பவர்களின் அதிகாரப்போக்கு, எந்தவொரு விடயத்தினையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முற்படும் விதம், மற்றும் சட்டங்களும் விதி முறைகளும் வலியவர்களுக்கும் வசதி படைத்தவர்களுக்குமல்ல நலிவடைந்தோருக்கு மட்டுமே என்கின்ற சர்வாதகாரப் போக்கினையும் ஆசிரியர் சிறப்பான முறையில் சித்திரித்துக் காட்டியுள்ளமையினையும் அறிய முடிகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலக ஆசிரியர் இந்நூலில் பெண்ணியம் சார்ந்த விடயங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றமையினையும் அறிந்துகொள்ள முடிகின்றது. அந்தவகையில் ஒரு பெண் பிறந்த வீடு புகுந்த வீடுகளில் வாழ்வினை எதிர்பொள்ளும் விதம், சமூத்தில் தன்னை தற்காத்துக் கொள்வதற்குாக எதிர் நோக்கும் சவால்கள், மற்றும் பெண்களின் பல்வேறு பட்ட குணாம்சங்களையும், ஒரு பெண் எவ்வாறு சமூகத்தினதும், குடும்பத்தினதும் தளது துணைவனுக்கும் பின்னனியாய இருந்து முன்னேற்றத்துக்கும் உறுதுணை புரியும் விதத்தினையும், குடும்ப பொறுப்புக்களை திறம்படச் செய்யும் நளினத்தினையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**


[1] **Abimathi Jeevanadan: தெருக்கூத்தை கொண்டாவோம், (https://roar.media/tamil/main/arts-culture/celebrate-the-art-of-koothu), 2020**

[2] **Asianet Tamil, first publication, Chennai (https://tamil.asianetnews.com/tamilnadu-chennai/life-of-dissolving-street-artists-families-with-no-income-pvbg4p),** 2019.

[3] **Green, Jesse, Review: A room in India overflows with astonishing visions, the New York time, 2017.**

[4] **Pushparani, தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள், International Refereed Journal of Tmil Research,(Volume 1), www.irjtsjournal.org, 2019.**

[5] **Varathpande, Monohar Laxman, History of Indian theatre, Abhinav publications, 1990.**

[6] **பெரியசாமி.பி.முனைவர்,தொல்காப்பியம் சுட்டும் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள், International Refereed Journal of Tmil Research,(Volume 2), www.irjtsjournal.org, 2020.**

[7] **தெருக்கூத்து பனுவல் - "கற்புக்கரசி கருணாம்பிகை திருமணமென்னும் வினாஜபாலன் பட்டாபிசேகம்", தமிழ் நாடு, இந்தியா.**

[8] **கோ.சுப்பிரமணியம், தெருக் கூத்தும் பார்வையாளர்களும் இதமிழ்ச் சுரங்கம்.காம் (http://www.tamilsurangam.in/general_knowledge/research_ideas/research_ideas_37.html),** 2021.